# 6 முன்னோடிப் பணி

**மனிதரை பாவத்தில் இருந்து விடுவிக்க இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இது கடவுளின் திட்டத்திற்கு அமைய நிறைவேறியது. பாவச்செயல்களைஇனம்கண்டுஅதிலிருந்துவிடுதலைஅடைவதற்கு வழிகாட்டுதலும், மனந்திரும்புவதற்கு ஊக்கப்படுத்துவதும் திருமுழுக்கு யோவானின் பிரதான பணியாக காணப்பட்டது. யோவானின் பிறப்பும் வாழ்வும் கடவுளின் திட்டத்திற்கு அமைய நடந்தது என்பதை முந்திய பாடங்களில் கற்றிருக்கின்றோம். திருமுழுக்கு யோவானின் பணி இயேசுவின் பணிக்கு முக்கிய பின்னணியாக அமைந்தது. திருமுழுக்கு யோவானின் இம் முன்னோடிப் பணியைப் பற்றி இப்பாடத்தில் விரிவாகக் கற்போம்.**

**லூக்கா** 3: 1-20

யூதர்கள் மெசியாவின் வருகைக்காக காத்திருந்த வேளையில், அவர்களுடைய எதிர்பார்ப்பு கைகூடுவதை அறிவித்தவர் திருமுழுக்கு யோவான். இயேசுவின் பணிக்கான முன்னோடிப் பணியை ஆற்றி ஆயத்தம் செய்தவரும் அவரே.

உரோமரின் ஆட்சிக்குட்பட்ட பலஸ்தீனாவின் யூதேயா கலிலேயா, இத்துரேயா, திரக்ககோனித்து, அபிலேன் போன்ற பிரதேசங்களில் வாழ்ந்தவர்களுக்கு திருமுழுக்கு யோவான் தனது செய்தியை வழங்கினார்.

திருமுழுக்கு யோவானின் காலத்தில் யூதர்களின் தலைமைக் குருவாக அன்னாவும் கய்பாவும் கடமையாற்றினார்கள். மதத்தலைவர்களும் யூதமதத்தை வலுப்படுத்துவதைப் பார்க்கிலும், உரோம அரசின் நன்மதிப்பைப் பெற்ற தமது பதவியைக் காத்துக்கொள்வதையே நோக்காகக் கொண்டு செயல்பட்டனர். உரோம ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்குத் தேவையான பணம், வரிதண்டுதல் மூலம் பெறப்பட்டது. இந்த வரிச்சுமையாலும் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு இருந்தார்கள். இவ்வாறான தலைமைத்துவத்தால் பல்வேறு இன்னல்களை சுமந்த மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் விதத்தில் திருமுழுக்கு யோவான் போதித்துப் பணியாற்றினார்.

கடவுளின் விருப்பிற்கு ஏற்ப வாழ்வதற்கு, மக்களின் வாழ்வில் மாற்றம் தேவை என்பதை அவர் வலியுறுத்தினார். அம்மாற்றத்தின் வெளியார்ந்த அடையாளமாக மக்களுக்கு திருமுழுக்கு வழங்கினார்.

மனந்திரும்புதலுக்கு அடையாளமாக இருந்த திருமுழுக்கை யூதர்களுக்கு மாத்திரம் கட்டுப்படுத்தாமல், யோர்தான் நதியில் எல்லோருக்கும் வழங்கினார். இயேசுவை மெசியாவாக ஏற்றுக் கொள்வதற்குத் தேவையான சூழலை உருவாக்குவதே திருமுழுக்கு யோவானின் பிரதான நோக்கமாக காணப்பட்டது. அதற்தகாக மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தலாயினார். அதற்காக மக்களுக்கு அவர் கொடுத்த சவால்களையும் அறிவுரைகளையும் இங்கு ஆராய்வோம்.

## 1. பொதுமக்களுக்கு

**மக்கள்** - **''அப்பொழுது நாங்கள் என்ன செய்யவேண்டும்?''**

**திருமுழுக்கு யோவான்** - **''இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்து கொள்ளட்டும் உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்.**
**லூக்கா** 3:10-11

எசாயா இறைவாக்கினர் கூறியுள்ளதின்படி எமது வாழ்வின் பள்ளங்களையும் மேடுகளையும் இனம் கண்டு அவற்றை சீர்செய்து கொள்ள வேண்டும். அவ்வாறா னவை இயேசுவை ஏற்றுக்கொள்வதற்குத் தடையாக அமையும். எனவே இயேசுவின் பணிக்காக வழியை முன்ஆயத்தம் செய்ய வந்த திருமுழுக்கு யோவான் மக்களின் வாழ்வை சீர்செய்வதற்கான வழிகாட்டலை முன்வைத்தார்.

சுயநலம் மிகுந்தவர்களாக தம்மைப் பற்றி மாத்திரம் சிந்திக்காது. பிறரைக் குறித்த சிந்தனை உள்ள புதிய சமூகம் உருவாக வேண்டும்.

## 2. அரசபணியில் ஈடுபட்டிருந்தோருக்கு

**வரிதண்டுவோர்** - **''போதகரே நாங்கள் என்ன செய்ய வேண்டும்?''**

**திருமுழுக்குயோவான்** - **''உங்களுக்கு குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக எதையும் தண்டாதீர்கள்''**
**லுக்கா** 3:12-13

திருமுழுக்கு யோவானின் மனந்திரும்புதலுக்கான செய்தி சமூகத்தில் வெவ் வேறு தளங்களில் பணியாற்றியவர்களின் வாழ்வை மாற்றிக்கொள்ள நல்ல சவா லாக அமைந்தது. உரோம அதிகாரிகளின் சார்பில் வரி தண்டியவர்கள் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கவில்லை. குறிக்கப்பட்ட தொகைக்கு அதிகமான தொகையை வரியாக பெற்றுக்கொண்டதை திருமுழுக்கு யோவான் அறிந்திருக்கலாம். எனவே, நீதியோடும் நியாயத்தோடும் பணியாற்ற மக்களை வழிநடத்தி மெசியாவாகிய இயேசுவின் பணிக்கு வழியை ஆயத்தம் செய்தார். இவ்வாறு மனம் மாறியோருக்கு

மனம் திரும்புதலுக்கான திருமுழுக்கைக் கொடுத்து நாட்டில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தினார்.

## 3. உரோமப் படைவீரர்களுக்கு

| | | |
|---|---|---|
| படைவீரர் | - | **''நாங்கள் என்ன செய்யவேண்டும்?''** |
| திருமுழுக்கு யோவான் | - | **''நீங்கள் எவரையும் அச்சுறுத்திப் பணம் பறிக்கா தீர்கள், யார் மீதும் பொய்க் குற்றம் சுமத்தாதீர்கள், உங்கள் ஊதியமே போதும் என்றிருங்கள்'' லூக்கா 3: 13-14** |

அதிகாரம் இருக்கும்போது அதை சரியாகவும் நீதியோடும் பயன்படுத்த வேண்டும். அப்போது சமூகத்தில் எல்லோரும் பயமின்றி பாதுகாப்பாக வாழலாம். அவ்வாறான சமூகத்தைக் கட்டி எழுப்புவதற்கு, மனந்திரும்புதலுடன் புதிய சிந்தனையோடு தத்தம் தொழிலில் ஈடுபடுவோரைக் கொண்ட சமூகம் உருவாக வேண்டும் என்பது இங்கு முன்வைக்கப்படுகிறது.

## 4. யூதமதத்தவருக்கு

**"ஆபிரகாம் எங்களுக்குத் தந்தை என உள்ளத்தில் சொல்லத் தொடங்காதீர்கள். இக்கற்களில் இருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளைத் தோன்றச் செய்யக் கடவுள் வல்லவர் என உங்களுக்குச் சொல்கிறேன்." லூக்கா 3:8**

யூதர்கள் ஆபிரகாமை தம் தந்தை என்று அழைத்தார்கள். ஆனாலும் அது சொல் சொல்லளவில் மாத்திரம் அல்ல செயல்பாட்டிலும் காட்டப்படவேண்டும் என்பதை இங்கு திருமுழுக்கு யோவான் சுட்டிக் காட்டுகிறார். அதாவது ஆபிரகாம் கடவுளுடன் கொண்டிருந்த நம்பிக்கையின் உறவைப் போன்ற உறவை யூதர்களும் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும்.

மெசியாவின் வருகையை எதிர்பார்த்து இருந்த யூதர்கள் திருமுழுக்கு யோவானை மெசியா என்று கருதினார்கள். அவர், இயேசு தன்னைவிட மேன்மை யானவர் என்று தெளிவாகக் கூறி, இயேசுவை மெசியா எனக் காட்டியுள்ளார். ''நான் தண்ணீரால் உங்களுக்கு திருமுழுக்கு கொடுக்கிறேன். ஆனால் என்னைவிட வலிமைமிக்க ஒருவர் வருகிறார். அவருடைய மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை. அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்கு திருமுழுக்கு கொடுப்பார்'' (லூக்கா 3:16) திருமுழுக்கு யோவானின் மனம் திரும்புதலுக்கான திருமுழுக்கை தண்ணீரால் கொடுப்பதாகவும், தனக்குப் பின்வரும் இயேசு தூய ஆவி என்னும் நெருப்பால் திருமுழுக்கு கொடுப்பார் என்றும் கூறியதன் மூலம் திருமுழுக்கு

யோவான் தனது முன்னோடிப் பணியை நன்கு அறிந்திருந்தார் என்பதையும் அதை மிகுந்த தாழ்மையோடு நிறைவேற்றினார் என்பதையும் வெளிப்படுத்துகிறார்.

''அவர் சுளகைத் தம் கையில் கொண்டு கோதுமையையும் பதரையும் பிரித்தெடுப்பார். கோதுமையைத் தம் களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பார்'' (லூக்கா 3:17). மனிதவாழ்வைக் குறித்த இறுதித் தீர்மானத்தை எடுப்பவர் இயேசு. கருணையும் கிருபையும் நிறைந்த இயேசு நியாயம் தீர்ப்பவராகவும் வருவார். அவ்வாறு நியாயம் தீர்க்கப்படும் மக்களை மனந்திரும்பச் செய்து வாழ்வை மாற்றச் செய்வது மாத்திரமே தமது பணி என்பதை திருமுழுக்கு யோவான் இங்கு தெளிவுபடுத்துகிறார்.

திருமுழுக்கு யோவானின் மனந்திரும்புதலுக்கான அழைப்பையும் அறிவுரையையும் நிராகரித்தவர்களும் இருந்தனர். ஏரோது அரசன் தனது சகோதரனின் மனைவியாகிய ஏரோதியா தொடர்பாக செயல்பட்ட விதத்தை திருமுழுக்கு யோவான் அங்கீகரிக்காது, ஏரோது அரசனைக் கடிந்துகொண்டார். ஏரோது அரசன் அதை ஏற்றுக்கொள்ளாது திருமுழுக்கு யோவானை சிறையில் அடைத்து கொலை செய்வதற்கும் கட்டளையிட்டான். யோவான் போதித்த மனந்திரும்புதலின் செய்தியே அவரின் மரணத்திற்கு காரணமாகியது. யோவான் பயமற்றவராக மனந் திரும்புதலின் செய்தியைப் பறைசாற்றினார் என்பது இதிலிருந்து புலனாகின்றது. அவர் மக்களின் மனந்திரும்புதலுக்கு அந்த அளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். மனந் திரும்புதலுக்கான அவரின் அழைப்பு அவ்வளவு சக்திவாய்ந்ததும், இயேசுவின் பணிக்கு வழியை சிறப்பாக ஆயத்தம் செய்த ஒன்றுமாக காணப்பட்டது.

இன்றைய சமூகத்திற்கு திருமுழுக்கு யோவானின் அறிவுரையும் கடிந்துரையும் மிகவும் பொருத்தமாக அமையும். அவை தரும் சவால்களை ஏற்று சிறந்த சகோதரத்துவத்துடன், சுயநலமற்றவர்களாக, தம்மிடமுள்ளவற்றைப் பிறருடன் பகிர்ந்து, ஒருவரை ஒருவர் தாங்கி, வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தி வாழச் சிறந்த வழிகாட்டியாகவும் அவை அமையும்.

சமூகத்தில் நாம் செய்யும் எந்த காரியத்திலும் உண்மையோடும், மிகுந்த செயல்திறனுடனும், தராதரபாகுபாடுகளை நோக்காது, கொள்ளை லாபம் தேடாது, நீதி நியாயத்துடன் பணியாற்றுவது அவசியமாகும். தவறுகள் காணப்படும் போது அவற்றை சரிப்படுத்துவதற்கு முயற்சித்து, நற்பண்புகள் கொண்ட சமூகத்தை வளர்ப்பது நற்பிரஜைகளின் கடமையாகும்.

பாடசாலையில் கற்று பயின்று வளரும் உங்களுக்கு சமூகத்தில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு திருமுழுக்கு யோவானின் மனந்திரும்புதலின் செய்தி பெரும் சவாலாக அமையலாம். தீய செயல்களில் ஈடுபட உந்தப்படும்போது திருமுழுக்கு யோவானின் அறிவுரையை நினைவுபடுத்திக்கொள்ளவும். அப்போது சவால்களின் மத்தியிலும் நல்வழியில் செல்வதற்கான வழிகாட்டல் கிடைக்கும்.

**செயற்பாடு**

1. திருமுழுக்கு யோவான் வெவ்வேறு மக்கள் கூட்டத்திற்கு கொடுத்த அறிவுரைகள் இன்றைய சமூகத்திற்கு எவ்வளவு பொருத்தமுடையதாகும் என்பதை ஒப்பிட்டு முன்வைக்கவும்.

2. உமது வாழ்வில் மாற்றம் அடையவேண்டிய பழக்கவழக்கங்களை அடையாளம் கண்டு, அவற்றை மாற்றுவதற்கு நீர் எடுக்கும் புதிய தீர்மானங்களைக் குறித்து சிந்தித்துப் பார்க்கவும்.